செய்தி வெளியீடு எண்: 175 நாள் : 23.04.2015

## பத்திரிக்கை செய்தி

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, சென்னை சேப்பாக்கம் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, உதவி ஆணையாளர் அலுவலகத்தில் இன்று 23.04.2015 மாண்புமிகு உணவு, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் இரா. காமராஜ் திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

புதிய குடும்ப அட்டை கோரியும், முகவரி மாற்றம், பெயர் நீக்கல், பெயர் சேர்த்தல் ஆகியவற்றுக்கு மனு செய்தவர்களின் குறைகளை நேரில் கேட்டறிந்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள், உரியவர்கள் அனைவருக்கும் விசாரணைக்குப்பின் குடும்ப அட்டைகள் தாமதமின்றி வழங்கவேண்டுமென அறிவுறுத்தினார். மேலும் ஒரு மண்டலத்திற்குள் புதிய குடும்ப அட்டை கோரி ஒருவர் விண்ணப்பித்தால் அவருக்கு குடும்ப அட்டை வழங்கக்கூடாது என்றோ, ஒரு மண்டலம் அல்லது வட்டத்திற்குள் வசிப்பவர் ஏற்கனவே உள்ள குடும்ப அட்டையிலிருந்து பெயர் நீக்கல் சான்றிதழ் பெற்று, புதிய குடும்ப அட்டை கோரி விண்ணப்பித்தால், அவர்களுக்கு குடும்ப அட்டை வழங்கக்கூடாது என்றோ எவ்வித உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை. விண்ணப்பதாரர் தனி சமையலறையுடன் கூடிய வீட்டில் தனிக்குடும்பமாக வசித்தால், தேவையான ஆவணங்களின் அடிப்படையில் விசாரணைக்குப்பின் புதிய குடும்ப அட்டை வழங்கப்பட வேண்டுமென்றும், குடும்ப அட்டைதாரர் அவருடைய விண்ணப்பத்தில் தெரிவிக்கின்ற விருப்ப அடிப்படையிலேயே அரிசி விருப்ப குடும்ப அட்டையோ, சர்க்கரை விருப்ப குடும்ப அட்டையோ

அல்லது எப்பொருளும் வேண்டா குடும்ப அட்டையோ வழங்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, சென்னை மாநகர பகுதிக்குட்பட்ட 16 மண்டல அலுவலகங்களில் கடந்த நான்கு ஆண்டுகளில் 1 இலட்சத்து 55 ஆயிரத்து 720 மனுக்கள் பெறப்பட்டு அவற்றுள் உரிய விசாரணைக்குப்பின் பரிந்துரை செய்யப்பட்டு, 1 இலட்சத்து 25 ஆயிரத்து 453 புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் முகவரி மாற்றம், பெயர் நீக்கல், பெயர் சேர்த்தல் ஆகியவற்றுக்கென பெறப்பட்ட மனுக்கள் அவ்வப்போது தீர்வு செய்யப்பட்டு தற்போது 1,835 மனுக்கள் மட்டுமே நிலுவையில் உள்ளது. இம்மனுக்களின் மீது உரிய விசாரணை செய்யப்பட்டு தீர்வு காணப்பட வேண்டுமென மாண்புமிகு அமைச்சர் அறிவுறுத்தினார்.

பொது மக்கள் தங்களுடைய குறைகளை தெரிவிக்க, சென்னை உணவு பொருள் வழங்கல் துறை ஆணையாளர் அலுவலகத்தில் செயல்படும், 044 –28592828 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு தீர்வு காணலாம்.

இந்த ஆய்வின் போது, உணவுப் பொருள் வழங்கல் துறை ஆணையாளர் திரு. சூ. கோபாலகிருஷ்ணன், இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர், திரு. எம். சந்திரசேகரன், இ.ஆ.ப., ஆகியோர் உடன் இருந்தனர்.

முதன்மைச் செயலாளர் / ஆணையாளர்
உணவு பொருள் வழங்கல் மற்றும்
நுகர்வோர் பாதுகாப்புத்துறை

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**